சேர்ந்தனர். அக் குழுவினர் இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை, டி.ஐ. சைக்கிள்ஸ் (இந்தியா) நிறுவனம், ஈசன் இன்ஜினியரிங் கம்பெனி, அசோக் லேலந்து நிறுவனம் ஆகியவற்றைச் சென்று பார்வையிட்டனர்.

திரு. இராம. அரங்கண்ணல்: தாய்லாந்து, பக்கத்திலுள்ள மலேஷியா நாடுகள் போன்ற வெளிநாடுகளில் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற ஹெவி எலக்ட்ரிக்கல் குட்ஸ்க்கு ஏராளமான கிராக்கியிருப்பதால் நமது அரசு தூதுக்குழு ஒன்றை அனுப்பி அங்கு நம் பொருள்களின் விற்பனையை அதிகரிப்பதற்கு மார்க்கம் இருக்கிறதா என்று காண உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதே அடிக்கடி நம் தொழில் அதிபர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை பார்ப்பதற்காகச் சென்று வருகிறார்கள். நாமும் அதற்கு ஊக்கம் அளித்து வருகிறோம். மலேஷியா நாட்டைப் பொருத்த அளவிற்கு நம் தொழில் அதிபர்கள் குழு அங்கு சென்று வந்தது. இங்கு கூட மலேஷியாவிற்கு அதிகமான பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு என்று ஒரு சங்கம் அமைத்து அவர்களும் இதைப் பற்றி ஆராய்கிறார்கள். அப்படி ஏற்றுமதி செய்வதோடு நம் தொழில் அதிபர்கள் மலேஷியா நாட்டில் தொழில் தொடங்குவதற்கு சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மலேஷியா நாட்டிற்கு இங்கிருந்து ஒரு தூது கோஷ்டி போனதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கு விலைகள் குறைவாக இருக்கிறது, இங்கே விலைகள் கூடுதலாக இருக்கிறது. இப்படியிருக்கும்போது நமக்கு அது கட்டுப்படியாகுமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்களின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அங்கு உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களுக்கும் நாம் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கும் விலை வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் நம் நாட்டில் உற்பத்திச் செலவு குறைவாக இருந்தால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். சில சமயங்களில் வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டும் என்ற காரணத்திற்காக சில சலுகைகள் கொடுக்கிறோம். நம் மாநில அரசு கூட சில வரிச் சலுகைகளைக் கொடுக்கிறது. அப்படிச் சலுகைகள் கொடுக்கிற காரணத்தினால், நாம் அன்னியச் செலாவணி பெறமுடிகிறது. இது உலக வியாபாரத்தில் ஒரு அங்கம்.

சித்திரைச்சாவடி கண்டசாரி சர்க்கரை ஆலை.

* 241 வினா—திரு. இரா. மாணிக்கவாசகம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலுக்கா, சித்திரைச்சாவடி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்டசாரி சர்க்கரை ஆலை (அன்னபூரணி) வேலை செய்யவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு அரசினரால் தரப்பட்ட கடன் வசூலிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்த நிறுவனத்திற்குத் தரப்பட்ட கடன் வசூலிக்கப் பட்டுவிட்டது.

இராமநாதபுரம் மாவட்ட கிழக்குப் பகுதிக்குப் பாசன வசதிகள்

*242 வின.—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்குப் பகுதியில், காட்டாற்று வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி பாசன வசதி செய்து கொடுக்க, சிறு சிறு அணைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) அவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

Compensation to family of palmyrah tappers

*243 Q.—THIRU J. JAMES :
THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government is paying compensation to the family of palmyrah tappers who met with fatal accident in the course of their work;

(b) what is the rate of compensation; and

(c) how many families have been benefited under this scheme in each district in Tamil Nadu?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) அவ்வித நடவடிக்கை எதுவும் அரசு எடுக்கவில்லை. ஆனால், பனைமரமேறும் தொழிலாளி களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, பனைவெல்லம் தயாரிக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் முறையான பணியாளர்-உறுப்பினர் தொழில் புரிகையில் விபத்துக் குள்ளானால், அவருக்கு இழப்பீட்டுத் தொகை அளிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஒப்பளித்தது.

---

* 303-304-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.